

# ஹர ஹர சங்கரா



FREE COPY
July - 2026
Vol. 5 - ISSUE 09

# KODAMBAKKAM TIMES



SINCE 1974

# SHARADHA STORE



WMB

## (ஹோம்லி டேஸ்ட் • பணிவுடன் பணிவிடை)


No.96/51, Arya Gowda Road, West Mambalam,
Chennai - 600 033. Mobile : 98408 53429

Plot No: 39, Chinthamani Vinayagar Koil Street, (Opp. Periyar Park),
Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.
E-Mail : saibuju.rr@gmail.com. Ph: 98841 53428

15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087.
Ph: 044 - 2377 3233 / Mobile : 98841 53428

**இலவச வீட்டு டெலிவரி. உயர்தர அனைத்து விதமான மளிகை சாமான்கள் கிடைக்கும்**

**Available at Alwarthirunagar only. Timings 9 AM to 1 PM & 4 PM to 8 PM**



## சீர் பட்சணங்கள்

11 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
9 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
7 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
5 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
4 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
3 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்

| பருப்பு தேங்காய் கூடு வகைகள் | இனிப்பு வகைகள் |
|---|---|
| லட்டு கூடு | மைசூர்பாகு, லட்டு |
| மணோகர கூடு | அதிர்சம், பாதுஷா |
| மைசூர்பாகு கூடு | சோமாசி |
| தேங்கா பர்பி கூடு | தேங்கா பர்பி |
| கடலை கூடு | விருத அப்பம், |
| பொட்டுகடலை கூடு | காப்பரிசி, |
| முந்திரி கூடு | புட்டு, வறுபயிறு |
| ஆசிர்வாத பருப்பு | கிடைக்கும் |
| தேங்காய் கூடு | |



மாம்பலம் சாரதா ஸ்டோர்ஸ்
நெய் மற்றும் வெண்ணெய்



**2489 3223**
**98408 53429**

# 1. நாழிகை மற்றும் நேரக் கணக்கீடு (Time Calculation)

பண்டைய ஜோதிட முறையில் நேரம் நாழிகை கணக்கிலேயே சொல்லப்படுகிறது. ஒரு முழு நாள் (24 மணிநேரம்) என்பது 60 நாழிகைகளைக் கொண்டது.

## அடிப்படை சூத்திரம்:

1 நாள் = 60 நாழிகை = 24 மணிநேரம்
1 மணிநேரம் = 2.5 நாழிகை
1 நாழிகை = 24 நிமிடங்கள்
1 விநாழிகை = 24 வினாடிகள்

## மாற்றும் முறை:

**மணிநேரத்தை நாழிகையாக மாற்ற:**
மணிநேரத்தை 2.5 ஆல் பெருக்க வேண்டும்.
எற்று.
உதாரணம்: 4 மணிநேரம் × 2.5 = 10 நாழிகை.

**நாழிகையை மணிநேரமாக மாற்ற:**
நாழிகையை 2.5 ஆல் வகுக்க வேண்டும் (அல்லது 0.4 ஆல் பெருக்க வேண்டும்).
உதாரணம்: 30 நாழிகை ÷ 2.5 = 12 மணிநேரம்.

# வேத வியாசர்



ஆடி மாத பௌர்ணமியில் இருந்து நான்கு மாதங்கள் சாதுர்மாஸ்யம் என்ற பெயரால் தீட்சை மேற்கொள்வது சனாதன சம்பிரதாயத்தில் வழக்கமாக உள்ளது.

சன்னியாசிகள் மட்டுமின்றி இல்லறத்தாரும் அவரவர் நியமத்தின்படி பிரத்யேக தீட்சையை மேற்கொள்வர். ஸ்ரீமன்நாராயணன் யோக நித்திரையில் இருக்கும் இந்த சமயம் அந்தர்முகமான ஆன்மீக சாதனைகளுக்கு சாதகமான காலம்.

ஆஷாடம் முதல் கார்த்திகை முடிய உள்ள ஐந்து பௌர்ணமிகளுக்கு "வியாச பௌர்ணமிகள்" என்று பெயர். வியாசரை நினைத்து வணங்கும் ஆஷாட


You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com

பௌர்ணமியை "குரு பூர்ணிமா" என்றழைப்பர்.

நம் சனாதன இந்து தர்மத்திற்கு தோற்றுவித்தவர் என்று எவருமில்லை. ஒரு நூல் என்பதும் இல்லை. ஆனால் வேதத்தின் ஆதாரமாக வளர்ந்த ஆகமம், புராணம், தர்மசாஸ்திரம், இதிகாசங்கள் இவை அனைத்திற்கும் ஒரே ஒரு படைப்பாளியாக யாரையாவது கூற வேண்டுமென்றால் வேதவியாசரையே கூற வேண்டும்.

அனைத்து பாரதீய கலாச்சாரத்திற்கும் அவரே ஜகத்குரு. சகல ரிஷிகளின் குரலையும் சேகரித்து சமர்ப்பித்த ஆச்சாரியர் வேதவியாசர்.

துவாபர யுகத்தில் அபாரமான குவியலிலிருந்து ஒன்றை எடுத்து நான்கு வேதங்களாக பிரித்து அஷ்டாதச (18) புராணங்களைப் படைத்து அதற்கு மேல் மகாபாரதத்தையும், பாகவதத்தையும் எழுதினார். பல்வேறு வழிமுறைகளில் பரந்திருந்த ஒன்றேயான தர்மத்தை ஓரிடத்தில் ஒருமைப்படுத்தி அளித்த ஸ்ரீமகாவிஷ்ணுவே வேதவியாசர்.

வேதவியாசரின் உண்மையான பெயர் கிருஷ்ணர். சத்தியவதிக்கும், பராசரருக்கும் (த்வீபம்) தீவில் தோன்றியதால் "துவைபாயனர்" என்ற பெயர் ஏற்பட்டது. வேதங்களை "வியாசம்" செய்ததால் வியாசர் என்ற பெயர் பெற்றார். நம் அனைத்து தர்மங்களுக்கும், சாகித்தியங்களுக்கும் வியாசரே மூலம். "வ்யாஸோச்சிஷ்டம் ஜகத் சர்வம்" வியாசரின் "உச்சிஸ்ஷ்டமே (எச்சில்) இந்த ஜகத்தில் உள்ள அனைத்து நூல்களும். பிரபஞ்சத்திற்கே ஞானஜோதியாகத் திகழ்பவர் வியாசர்.

ஒரு லட்சம் சுலோகங்களாலான மகாபாரதம் சகல சாஸ்திரங்களும், சர்வ தர்மங்களும் ஒன்றிணைந்த நூல். இந்த நூலின் மூலம் ஜகத்குரு ஸ்ரீவியாசர் அளித்துள்ள ஞானம், அறிவு, விஞ்ஞானம் அனைத்தும் அபாரமானது. பகவத் கீதை, யக்ஷப்பிரச்னை, விஷ்ணு ஸஹஸ்ரம், சிவ ஸஹஸ்ரம் பலவித உபாக்கியானங்கள் இவ்விதம் விஸ்தாரமான விஷயங்களோடு கூடிய அற்புத சாகித்திய சிருஷ்டி மகாபாரதம்.

"யதி ஹாஸ்தி ததன்யத்ர, யன்னே ஹாஸ்தி நதத் க்வசித்" "இங்கு என்ன உள்ளதோ அதுவே எங்கும் உள்ளது. இங்கே இல்லாதது எங்குமே இல்லை" என்று வியாசரே மகாபாரதத்தை பற்றிக் கூறியுள்ளார். மானுட நாகரீகத்திற்கு பாரத நாட்டு கலாச்சாரம் அளித்துள்ள அன்பளிப்பு இது.

வியாச தேவரைப் பற்றி மகாபாரத்தில் வியாசரின் சீடர் வைசம்பாயனர் விவரித்துள்ள செய்தி என்னவென்றால் "தொடக்கத்தில் பிரம்மதேவரின் நான்கு முகங்களிலிருந்து நாராயணன் வேத வித்யையை வெளிப்படுத்தினார். அவற்றை உலகங்களில் வியாபிக்கச் செய்வதற்கு விஷ்ணுவே தன் அம்சத்துடன் ஒரு தேஜஸ்ஸை அவதரிக்கச் செய்தார். அவர் பெயர் "அபாந்தராத்மன்" இதன் பொருள் "உள்ளே உள்ள அஞ்ஞான இருளை அகற்றுபவர்" என்பது. விஷ்ணுவிற்கு "ஆத்மஜன்" அதாவது "மகன்" என்று போற்றப்படுகிறார். "அபாந்தராத்மன்". புத்தி கூர்மை மிக்க இவர் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களோடு அவதரித்து உலகில் வேத தர்மத்தை நிலைநாட்டுகிறார்.

"வியாசாய விஷ்ணு ரூபாய வியாச ரூபாய விஷ்ணவே
நமோ வை ப்ரஹ்ம நிதயே வாசிஷ்டாய நமோ நம:"

என்று வியாசரை வேத நிதியான விஷ்ணுவாக ஆராதிக்கிறோம்.

"அபாந்தராத்மன்" இந்த வைவஸ்வத மன்வந்தரத்தில் பராசரரின் புத்திரனாக தோன்றினார். பராசரரின் தந்தை சக்தி, அவருடைய தந்தை வசிஷ்டர்.

இந்த பரம்பரையை தெரிவிக்கிறது இந்த ஸ்லோகம்

"வ்யாசம் வசிஷ்ட நப்தாரம் சக்தே பௌத்ரம கல்மஷம்
பராசராத்மஜம் வந்தே சுக தாதம் தபோ நிதிம்"

"வசிஷ்டரின் கொள்ளுப்பேரன், சக்தியின் பேரன், பராசரரின் புத்திரன், சுகரின் தந்தை ஆன தபோநிதி வியாசருக்கு வந்தனம்", என்று போற்றுகிறார்.

மகாபாரதத்திற்கு மூல புருஷர் கூட வியாசர்தான். "தன் தெய்வீக சக்தியால் நிரந்தரம் வைகுண்டத்திற்கு சென்று நாராயணனை ஆராதிக்கின்ற சமர்த்தர் இந்த வியாசர்" என்று மகாபாரதம் தெரிவிக்கிறது.

---

# முருகப்பெருமான் பற்றிய ஆய்வு

இடநாடி (வள்ளி), பின்கலாநாடி (தெய்வானை), சூட்சுமநாடி (முருகப்பெருமான்) சரம் "என்றால் மூக்கு". "சரத்தை வயப்படுத்தினால் காலத்தை வெல்லலாம். காலனையும் வெல்லலாம். சரத்தை வயப்படுத்திக் காட்டியதால் "சரவணன்" என்ற சிறப்புப் பெயரும் உண்டு.



வயதாகும் நிலையை அதாவது Aging Process -ஐ நிறுத்தி, என்றும் குமரனாக, அழகனாக நீண்டகாலம் ஏறத்தாழ 4000 ஆண்டுகள் பூத உடலுடன் வாழ்ந்து காட்டியவர்.

மனிதன் இறுதியில் சவமாகக் கூடாது, சிவமாக வேண்டும். கற்பூரம் கரைவது போல் தன்னை வேறொரு பரிமாணத்திற்கு மாற்றிக்கொண்டு பிரபஞ்சம் எங்கும் வியாபிக்க வேண்டும் என்பது யோகமார்க்கத்தின் நிறைவான செய்தி.

**முருகனின் இரண்டு மனைவிகள்**

வள்ளி, தெய்வானையை பற்றி தெரிந்துகொள்வதற்கு முன் சுழுமுனை என்றால் என்ன என்பதினை தெரிந்து கொள்ள வேண்டும்.

சுழுமுனை என்பது மானுட உடலில் உள்ள ஒரு மைய நரம்பு. நமது உடலில் இரண்டிரண்டு ஜோடிகளாக உள்ள உறுப்புகள் எவை, எவை எனப் பார்த்தால் அவை புருவம், கண்கள், மூக்கின் நாசிகள், உதடுகள், மார்பகம், கைகள், சிறுநீரகம் மற்றும் கால்கள் எனச் சொல்லலாம்.

இவை உடலின் இடது புறமாகவும், வலது புறமாகவும் ஒரு மையத்தினைச் சுற்றி பின்னிப் பிணைந்து உள்ளன. அந்த மையமே சுழுமுனை என்பது ஆகும். இன்னும் விரிவாக சொல்லப் போனால் நமது உடலில் இரண்டு, இரண்டு ஜோடிகளாக இல்லாமல் ஒன்று மட்டும் உள்ள உறுப்புகள் எவை எனப் பார்த்தால் அவை எல்லாம் நமது உடலின் மத்தியிலேயே அமைகின்றன.

இவற்றுள் தலையிலிருந்து ஆரம்பித்து பார்த்தால் மத்தியில் உள்ள ஒற்றை உறுப்புகள் :

நெற்றி (பிரம்மந்திரா), தொண்டைக் குழி (ஆங்ஞை), மார்புக்குழி (விசுத்தி), தொப்புள் குழி (மனிப்புரம்), ஆண் / பெண் குறி (சுவாதீஸ்டன்), மலக்குழி (மூலாதாரம்)

இந்த ஆறு குழிகளையும் ஒரு நேர்கோட்டால் இணைத்தால் வரும் மையக் கோடே சுழுமுனை என்பதாகும். இந்த சுழுமுனை புருவமுடிச்சிலிருந்து தலையில் விரிந்து, பின் குவிந்து ஒடுங்குகிறது. இந்த தலைப்பரப்பினை பெரியோர்கள் சாஹஸ்ரா எனவும் அர்ஸ் எனவும் அழைப்பர். மருத்துவர்களின் லோகோவான கீழுள்ள படத்தினைப் பார்த்தால் இது எளிதாக புரியும்.



முருகன் கையிலுள்ள வேலும் இந்த சுழுமுனை குறியீடே. வேலின் குவிந்த பரப்பு நமது நெற்றியையும் வேலின் கீழுள்ள தண்டானது மற்ற 6 குழிகளை இணைக்கும் சுழுமுனை கோடாகவும் உள்ளது. மருத்துவர்களின் லோகோவில் இடது புறமாகவும் வலது புறமாகவும் சுழுமுனையைப் பின்னிப் பிணைந்து செல்பவை நமது அவயங்கள்.

வலது புறம் இருப்பது பிங்கலை, இடது புறம் இருப்பது இடகலை எனவே இடது புறமும், வலது புறமும் உள்ள அவயங்களை இயக்கி இயங்கச் செய்வது இந்த சுழுமுனையே. சுழுமுனை தத்துவத்தினை அறிந்து கொண்டால் யோகமார்க்கத்தில் பயணிக்க ஏதுவாக இருக்கும்.

சுழுமுனை முருகன், இடகலை பிங்கலை என இடப்புறமும், வலப்புறமும் உள்ள அவயங்களே வள்ளி, தெய்வானை ஆக மனைவியர் என்பது ஒரு குறியீடே.

பெண்பாலிலுள்ள சுரோணிதமும், ஆண்பாலிலுள்ள சுக்கிலமும் சேர்ந்து கருத்தரித்து உடம்பும், உயிரும் உண்டாகிறது. தந்தையிடமிருந்து உயிரும், தாயிடமிருந்து உடம்பும் தோன்றினாலும் தோன்றிய அந்த உடம்பும் உயிரும் நூறு ஆண்டுகள் வரை நட்புடன் இருந்து உடம்பும், உயிரும் பிரியாமல் நட்போடு வாழ்ந்தாலும் ஒரு காலத்தில் எப்படியாவது உடம்பை விட்டு உயர் பிரிந்து போய் விடுகிறது.

இதுவே இயற்கையின் நியதியாகும். பரு தேகமான ஆணும், பெண்ணும் கூடினால் உயிரும், பிரிந்து போகக்கூடிய பரு உடம்பும் உண்டாகிறது. ஆனால் சூட்சும தேகத்தை உண்டாக்கவல்ல இடது கலையாகிய பெண்ணும், வலது கலையாகிய ஆணும் சேர்ந்தால் சூட்சும தேகம் உண்டாகும்.

ஆனால் இடது கலையும், வலது கலையும் ஒருபோதும் சாதாரணமாக ஒன்று சேராது. ஆனால் ஒன்று சேராத இடது கலையையும், வலது கலையாகிய சூரிய கலையையும், சுழிமுனையாகிய புருவ மத்தியில் ஒன்று சேர்த்தால் அழிகின்ற பரு உடம்பும் அழியாது, அழியாத சூட்சும தேகமும் தோன்றும்.

உயிரும் தோன்றி எல்லாம் ஒன்றினுள் ஒன்றாய் கலந்து என்றும் அழிவற்ற மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்று மாறாத இளமை கொண்ட ஒளிதேகமாக மாறி விடும். இந்த மாபெரும் இரகசியத்தை முதலில் அறிந்த முதுபெரும் தலைவன் முருகப்பெருமான். இதை தனது முதல் சீடரான அகத்தியருக்கு முருகன் போதித்தார். அகத்தியர் வாயிலாக சித்தப்பரம்பரை அறிந்துகொண்டது.

முருகன் பிறந்த ஊர் "காங்கேயம்" அதனால் அவருக்கு காங்கேயன் என்ற சிறப்பு பெயர் உண்டு. முருகன் ஜீவசமாதி அடைந்த இடம் காங்கேயம் "சிவன் மலை".


---

## ஆவணி அவிட்டம் 2026

26/08/2026 (Wednesday)
ரிக் வேதம் (Rig Vedha)

27/08/2026 (Thursday)
யஜுர் வேதம் (Yajur Vedha)

28/08/2026 (Friday)
காயத்ரி ஜெபம் (Gayathri Jebam)




SREE MANGALAGURU JOTHIDA NILAYAM

'VAAZHVIL VELICHAM'

SURESH MADHAVAN

93609 45818

(With Appointment Whatsup Only)

# பெருமாளை கருட வாகனத்தில் சேவிப்பதால் என்ன பலன்கள்



கிரதாயுகத்தில் அஹோபிலத்தை கொடுங்கோலனாக ஆண்டு கொண்டிருந்த ஹிரண்ய கசிபுவை வதம் செய்து தன் பக்தனான பிரகலாதனைக் காப்பாற்ற பெருமாள் எடுத்த அவதாரம் நரசிம்ம அவதாரமாகும்.

பிரஹலாதனைக் காக்க பெருமாள் நரசிம்ம மூர்த்தியாக ஹிரண்யனின் அரண்மனை தூணில் அவதாரம் செய்ததால் அவர் கருடன் மேல் எழுந்தருளி வராமல் தனியாக வரவேண்டிய தாயிற்று. இதுபற்றி அறிந்த கருடன் மிகவும் துயருற்று பெருமாளிடம் நரசிம்ம அவதார காட்சியை தனக்கும் காட்டி அருள வேண்டினார்.

பெருமாள் கருடனை அஹோபிலம் சென்று தவமியற்றும்படி கூறி தான் அங்கேயே நரசிம்ம அவதார காட்சி தருவதாகவும் உறுதியளித்தார். அவ்வாறே பல இன்னல்களுக்கிடையே கருடன் தவமியற்றினார்.

கருடனுக்கு உறுதியளித்தபடி பெருமாள் மலைக்குகையில் உக்ர நரசிம்மராய் காட்சியளித்தார். மாறாத பக்தி கொண்டு பெருமாள் சேவையே பெரிது என்று அவரிடம் பூரண சரணாகதி அடைந்ததால் கருடன் கருடாழ்வார் என்று போற்றி அழைக்கப்படுகின்றார்.

கருட வாகனம் இரு பெரிய இறக்கைகளுடன் மனிதனைப் போல உருக்கொண்டு, கருடன் போன்ற வளைந்த மூக்குடன் கூடிய முக தோற்றத்தில் பெருமாள் எதிரே நின்ற நிலையில் தான் காட்சி தருவார். முகத்தில் பெரிய மீசை, அலகு இருக்கும், தனது உடலில் அட்ட நாகங்கள் என்னும் எட்டு பாம்புகளை அணிகலனாக அணிந்திருப்பார்.

பெருமாளை வாகனங்களில் சுமந்து வரும் போது அமர்ந்த நிலையில் ஒரு காலை மண்டியிட்டு, ஒரு காலை சற்று உயர்த்தியிருப்பார். இரு பெரும் கரங்களை பெருமாளின் பாதங்களை ஏந்துவதற்காக முன்புறம் நீட்டியவாறு இருப்பார்.

பெருமாளை கருட வாகனத்தில் சேவித்தவர்களுக்கு மறுபிறவி கிடையாது என்பது நம்பிக்கை. பெருமாள் கோவில்களில் பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வாக கருட சேவை நடை பெறுகின்றது.

# நல்லவர்களின் தொடர்பு என்ன பலனைத் தரும் என்பதை விளக்கும் கதை

விஸ்வாமித்திரர் ஒரு யாகம் செய்யத் தீர்மானித்தார் அந்த யாகத்தின் முடிவில் இருப்பதையெல்லாம் தானம் கொடுத்து விடவேண்டும் என்பது முறை. அதை அனுசரித்து விஸ்வாமித்திரர் தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் தானம் கொடுத்துக்கொண்டிருந்தார். அதை அறிந்த வசிஷ்டர் விஸ்வாமித்திரர் கொடுக்கும் தானத்தைத் தானும் பெறுவதற்காக வந்தார். வசிஷ்டரின் வருகையை அறிந்த விஸ்வாமித்திரர் மனம் மகிழ்ந்து வசிஷ்டருக்குத் தானம் கொடுத்தார். தானம் பெற்ற வசிஷ்டரும் அமைதியாகத் திரும்பினார். சில நாட்கள் ஆகின. விஸ்வாமித்திரர் செய்ததைப் போலவே தானும் ஒரு யாகம் செய்ய எண்ணினார் வசிஷ்டர். நல்லவர்களின் நல்ல தீர்மானம் அல்லவா? உடனடியாகச் செயல் பாட்டிற்கு வந்தது.



ஆம், வசிஷ்டர் யாகம் செய்தார், யாகத்தின் முடிவில் தன்னிடம் இருந்தவற்றையெல்லாம் தானம் செய்யத் தொடங்கினார். தகவல் அறிந்த விஸ்வாமித்திரர், "வசிஷ்டர் தானம் கொடுக்கிறார் என்றால் அது விசேஷம்தான். நாமும் போய் அதைப்பெற வேண்டும்" என்று புறப்பட்டு வந்தார். ஆனால், விஸ்வாமித்திரர் வருவதற்குள்ளாக வசிஷ்டர், தன்னிடம் இருந்த அனைத்தையும் தானம் கொடுத்து முடித்து விட்டார். அதை அறிந்ததும் விஸ்வாமித்திரர் கொதித்தார். "ஆ, வசிஷ்டரே நீர் என்னை அவமானப்படுத்திவிட்டீர்.

தானம் வாங்கவந்த என்னை வெறுங்கையுடன் அனுப்ப எண்ணிவிட்டீர் போலிருக்கிறது" என்றார். அவரை அமைதிப்படுத்திய வசிஷ்டர், "விஸ்வாமித்திரரே கோபம் வேண்டாம் பொருட்கள் இல்லாவிட்டால் என்ன? நல்லவர்களுடன் சேர்ந்திருந்த சத்சங்க சாவகாசப்பலன் ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) என்னிடம் உள்ளது. அதில் கால் பங்கை உங்களுக்குத் தருகிறேன்" என்றார்.

அதைக்கேட்டதும் விஸ்வாமித்திரர் மேலும் கோபப்பட்டார். அப்போதும் வசிஷ்டர் கோபப்படவில்லை. "சரி, விஸ்வாமித்திரரே நீங்கள் போய், உலகுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் சூரியனையும், பூமியைத் தாங்கும் ஆதிசேஷனையும் நான் அழைப்பதாகச் சொல்லி அழைத்து வாருங்கள்" என்றார். சற்று யோசித்த விஸ்வாமித்திரர், "சரி, போய்த்தான் பார்ப்போமே என்று எண்ணிப் புறப்பட்டார்.

போனவர், ஆதிசேஷனிடம் தகவலைச்சொல்லி அழைத்தார். ஆதிசேஷன் "சுவாமி நான் வந்துவிட்டால் என் வேலையை யார் செய்வது? எனக்கேட்க விஸ்வாமித்திரர் சூரியனிடம் போய்த் தகவலைச் சொல்லி அழைத்தார். சூரியபகவானோ, "சுவாமி உங்களுடன் நான் வந்தால் என் வேலையை யார் செய்வார்கள்? உலகம் இருண்டுபோய்விடாதா? எனச் சொல்லி மறுத்தார்.

விஸ்வாமித்திரர் திரும்பி வந்து, நடந்தவற்றை வசிஷ்டரிடம் சொன்னார். உடனே வசிஷ்டர், "அப்படியா? சரி, ஒரு நாழிகை சத்சங்க சாவகாசப் பலன் என்னிடம் இருப்பதாகச் சொன்னேன் அல்லவா? அதில் கால் பங்கை ஆதிசேஷனுக்கும், கால் பங்கை சூரிய பகவானுக்கும் அளிக்கிறேன் இப்போது போய்க்கூப்பிடுங்கள் என்றார்.

விஸ்வாமித்திரரும் போய் ஆதிசேஷனிடமும், சூரிய பகவானிடமும் தகவல் சொல்லி அழைத்தார். அவர்கள் இருவரும் உடனே வந்து விட்டார்கள். "முதலில் மறுத்த நீங்கள் இப்போது வருகிறீர்களே எப்படி? இப்போது மட்டும் உங்கள் வேலையை யார் செய்வார்கள்?" எனக் கேட்டார்". வசிஷ்டர் அளித்த கால் பங்கு சத்சங்க சாவகாசப் பலன் எங்கள் வேலையைச் செய்யும்" என்று ஆதிசேஷனும் சூரிய பகவானும் பதில் அளித்தார்கள்.

விஸ்வாமித்திரருக்கு அப்போது தான் உண்மை புரிந்தது. சத்சங்க சாவகாசப் பலன் அதாவது நல்லவர்களின் கூட்டுறவு-சேர்க்கை எப்படிப்பட்ட சக்தி படைத்தது என்பதை உணர்ந்தார். அப்புறம் என்ன? விஸ்வாமித்திரர் பணிவோடு வசிஷ்டரிடம் இருந்து கால் பங்கு சத்சங்க சாவகாசப் பலனைப்பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பினார். திரும்பிய விஸ்வாமித்திரர் தன் ஆசிரமத்தை நெருங்கும்போது ஆசிரம வாசலில் மகாவிஷ்ணுவைப் போலத்தோற்றம் கொண்ட இருவர் இருப்பதைப் பார்த்தார்.

அவர்களை நெருங்கி விஸ்வாமித்திரர் கேட்பதற்குள் அவர்களே விஸ்வாமித்திரரை நெருங்கி வந்து, "சுவமி நாங்கள் பகவானின் ஏவர்கள் பகவான் ஸ்ரீராமராக அவதாரம் செய்யப் போகிறார். அப்போது சீதாதேவிக்கும், ஸ்ரீராமருக்கும் திருமணம் செய்து வைக்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. பகவான் அறிவித்து விட்டு வரச் சொன்னார். எல்லாம் சத்சங்க சாவகாசப்பலன்" என்று சொல்லிச் சென்றார்கள். அதன்படியே யாக சம்சரட்சணம் என்ற பெயரில் ஸ்ரீராமரையும், லட்சுமணனையும் விஸ்வாமித்திரர் அழைத்துப் போனதும், சீதாகல்யாணம் நடந்ததும் தெரியுமே, நல்லவர்களின் தொடர்பு என்ன பலனைத் தரும் என்பதை விளக்கும் கதை இது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே
அவரோடு இணங்க இருப்பதுவும் நன்று.

(ஔவையார் - மூதுரை)

# பெரியவா அநுக்ரஹ வழி

பெரியவாளுடைய பரமபக்தர் ஒருவருக்கு காது கேட்காது. புஸ்தகம் படிக்க முடியாதபடி பார்வைக் குறைபாடு. எதிரில் நிற்பவர்கள் கூட ஏதோ நிழல் மாதிரித்தான் தெரிவார்கள். அந்த வயசான பக்தருக்கு ரொம்ப தீவிரமான ஆசை ஒன்று இருந்தது. ஏக்கம் என்று கூட சொல்லலாம். அது அவருக்கு ஒரு விதத்தில் வெறியாகவே இருந்தது. பாவம் "சரஸ்வதி"யிடந்தானே மனக்குறையை சொல்ல வேண்டும்? பெரியவாளிடம் ரொம்ப மனம் உருகி வேண்டினார்.

"பெரியவா ... எனக்கு ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை, பதினெட்டு புராணங்கள் எல்லாத்தையும் படிச்சு என்னோட ஜன்மாவை கடைத்தேத்திக்கணும் ... ஆனா, என்னால புஸ்தகம் படிக்க முடியாது, கண் பார்வை முக்காவாசி கெடையாது, காதால கேக்கலாம் ... ன்னா காதும் கேக்கலை. நான் என்ன பண்ணுவேன்? பெரியவாதான் எனக்கு கதி" அப்போது பெரியவாளை சுற்றி சில பண்டிதர்களும் அங்கே இருந்தார்கள். பெரியவா அவர்களிடம் "இவரோ ராமாயண, மஹாபாரதம், புராணம் எல்லாத்தையும் படிக்கணும்னு ரொம்ப ஆசைப் படறார்... கண் பார்வை சரியில்லே, என்ன பண்ணலாம்?" சர்வஞ்யத்வம் என்பதின் முதல் தகுதியே தனக்கு எல்லாம் தெரிந்தும், அதைப் பற்றி கொஞ்சங்கூட சட்டை செய்யாமல் (ஆஞ்சநேய ஸ்வாமி மாதிரி) மற்ற பேருக்கு முக்யத்வம் குடுப்பதுதான். பண்டிதர்களுக்கு சரியான பதில் சொல்ல முடியவில்லை. பெரியவாளே சொன்னார்.



"நைமிசாரண்யம்ன்னு ஒரு க்ஷேத்ரம் இருக்கு தெரியுமோ?"

"தெரியும்"

"அங்க என்ன விசேஷம்?"

"அங்கதான் ரிஷிகள்ளாம் புராணங்கள் கேட்டா..."

"புராணங்களை எழுதினது யாரு?"

"வ்யாஸர் ..."

"வ்யாஸாச்சார்யாள் புராணங்கள் எழுதின எடம்ன்னு ஒரு ஸ்தலம் இருக்கு. "வ்யாஸகத்தி"ன்னு பேரு ..."

பண்டிதர்களுக்கோ ஆச்சர்யம். அவர்களுக்கும் இது புது விஷயமாக இருந்தது. நைமிசாரண்யம் போய்விட்டு வந்தவர்களுக்கு கூட இந்த இடம் பற்றி தெரிந்திருக்கவில்லை. ரொம்ப நுணுக்கமான விஷயங்கள் கூட பெரியவாளுக்கு தெரியும்.

பக்தரை அருகில் அழைத்து "குடும்பத்தோட நைமிசாரண்யம் போயி கொஞ்சநாள் அங்க தங்கு, வ்யாஸர் புராணங்கள் எழுதின எடத்ல விழுந்து, விழுந்து நமஸ்காரம் பண்ணு. அப்புறம் ஒனக்கே எல்லாப் புராணங்களும் மனஸ்ல புரியும்."

நிச்சயமாக அந்த பக்தருக்கு புரிந்திருக்கும். பெரியவா சொன்னது அனுபவ ஸாத்யமான வழி அனுக்ரஹ வழி.

மஹாபெரியவா காயத்திரி :

ஓம் காஞ்சி வாஸாய வித்மஹே
சாந்த ரூபாய தீமஹி
தன்னோ சந்த்ரசேகரேந்த்ர ப்ரசோதயாத்

---

குரு சரணம் குரு நாதா சரணம்

# தட்சிணாமூர்த்தி

அறுபத்து நான்கு சிவ திருமேனிகளுள் ஒன்றே நாம் வணங்கும் தட்சிணாமூர்த்தி ரூபமாகும். தட்சிணம் என்றால் தெற்கு என்றும், ஞானம் என்றும் பொருள் உண்டு. இவரை தென் திசை கடவுளாக குறிப்பிடுகின்றார்கள். சிவ ஆலயங்களில் கருவறையின் தெற்கு பக்க சுவரின் வெளிப்புறத்தில் இவரின் திருவுருவம் காணப்படுகிறது. இவரை பரம குரு என்றும் அழைக்கிறார்கள். பஞ்ச குண சிவமூர்த்திகளில் தட்சிணாமூர்த்தி சாந்த மூர்த்தி என்றும் அழைக்கப்படுகிறார்.


இவர் தோன்றிய விதம் மற்றும் இவருடைய திருமேனியின் சிறப்புகளைப் பற்றி நாம் அறிந்து கொள்வோம்.

சனகாதி முனிவர்களான பிரம்ம தேவரின் குமாரர்களின் ஞானம் பெற வேண்டி குருவினை நாடிச் செல்லும் போது பிரம்மா படைப்பு தொழிலில் மூழ்கியதாலும், திருமால் இல்லறத்தில் ஈடுபடுவதாலும் அவர்களை விடுத்து வேறு குருவினை தேடிச் சென்றார்கள்.

இதனை அறிந்த சிவபெருமான் தானும் சக்தியுடன் இருப்பதைக் கண்டால் பிரம்ம புத்திரர்கள் ஏமாற்றம் அடைந்து விடுவார்கள் என்று வடவிருட்சத்தின் கீழ் அமர்ந்து பதினாறு வயது சிறுவனாக வரவேற்றார். அவர்களின் ஞானத்தினைப் பற்றிய கேள்விகளுக்கு தட்சணாமூர்த்தியாக இருந்து சிவபெருமான் பதில் தந்தார் என்றாலும் கேள்விகள் அதிகரித்த வண்ணமே இருந்தது. பின்னர் தட்சிணாமூர்த்தி சின் முத்திரையை காண்பிக்க அதைக் கண்ட சனகாதி முனிவர்களுக்கு அமைதியும், ஆனந்தமும் உண்டாகி பின் ஞானம் பெற்றனர்.

**தட்சிணாமூர்த்தியின் ரூபம் :**

நான்கு கைகளுடன் ஆலமரத்தின் கீழ் தென்திசையை நோக்கி அமர்ந்துள்ளார். அவர் தனது வலது காலால் "அபஸ்மரா" என்ற அரக்கனை மிதித்த நிலையில் அமர்ந்துள்ளார். அபஸ்மரா என்பது அறியாமை மற்றும் இருளை குறிக்கும். அவரது ஒரு மேல் கையில் ருத்திராட்ச மாலையும், ஒரு பாம்பையும் பிடித்துள்ளார். மற்றொரு மேல் கையில் நெருப்பைக் கொண்டுள்ளார். அவர் தன் கீழ் இடது கையில் தர்ப்பைப் புல்லையும், ஓலைச் சுவடியையும், தன் கீழ் வலது கையில் ஞான முத்திரையையும், சின் முத்திரையையும் கொண்டு தியானத்தில் அமர்ந்துள்ளார்.



**திருமேனியின் சிறப்புகள் :**

1. திருமேனியானது பளிங்கு போன்ற வெண்ணிறத் தூய்மையை உணர்த்தியும்
2. வலது பாதத்தால் அரக்கனை மிதித்து அமர்ந்திருப்பது அனைத்து தீமைகளையும் அடக்கி ஆளும் வலிமையையும் குறிக்கும்
3. புலித்தோல் அமர்வானது தீய சக்திகளை அடக்கியாளும் பேராற்றலையும்
4. அவர் அணிந்துள்ள பாம்பு குண்டலினி சக்தியையும்
5. அணிந்துள்ள ருத்திராட்ச மாலை 96 தத்துவங்களை உணர்த்துவதாகும். இம் மாலை கொண்டு இறைவனை பன் முறை எண்ணி பல காலம் தியானித்து உருவேற்றி ஞானம் பெறும் நெறியை உணர்த்துகிறது.
6. ஆல மரமும் அதன் நிழலும் மாயையும் அதன் காரணமான உலகத்தையும் குறிக்கிறது.
7. அவர் தென் முகமாக அமர்ந்துள்ளது வடக்கு நோக்கி அவரை தியானிக்க வேண்டும் என்ற குறிப்பையும்
8. சின் முத்திரையானது ஞானத்தின் அடையாளம். பெருவிரலின் அடிப்பாகத்தைச் சுட்டு விரல் தொடவும், ஏனைய மூன்று விரல்களும் விலகி நிற்கும் முத்திரையாகும். பெருவிரல் இறைவனையும், சுட்டு விரல் உயிரையும், மற்ற மூன்று விரல்களுள் நடு விரல் ஆணவத்தையும், மோதிர விரல் கன்மத்தையும், சுண்டு விரல் மாயையையும் குறிக்கும். உயிரானது இம் மூன்றிலிருந்தும் நீங்கி இறைவனை அடைந்து இன்புறுவதே இம் முத்திரையின் தத்துவமாகும்.

இவர் ஞான தட்சிணாமூர்த்தி, வியாக்யான தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, மேதா தட்சிணாமூர்த்தி, சக்தி தட்சிணாமூர்த்தி மற்றும் வீர, லட்சுமி, பிரம்ம, ராஜ தட்சிணாமூர்த்தி என்று பல வடிவங்களில் உள்ளதாக ஆகமங்களில் கூறப்பட்டுள்ளது.

இவர் முன் தியானத்தில் அமர்ந்து வழிபட்டால் அலை பாயும் நமது மனம் மற்றும் எண்ணமும் ஒரு நிலைப்படும். இதனால் நமது வாழ்வில் உண்டாகும் பல சிக்கல்களுக்கு நல்ல முடிவுகளை எடுக்கும் திறன் மேம்படும். இவரை வணங்குவதற்கு வியாழக்கிழமை தான் உகந்த நாள் என்று இல்லாமல் அனைத்து நாட்களும் உகந்த தினமாகும். உலகம் எனும் மாயையிலிருந்து விடுபட்டு ஞான நிலை அடைய நாமும் இவரை வணங்கி வழிபடுவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்

# KRISHNA DELISH COFFEE

KRISHNA DELISH COFFEE
GREAT TASTE




## எங்களிடம் தரமான காபி கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்

## ரூ 920 மட்டுமே

* Condition Apply

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore
Ganapathy's
CELEBRATING
84
Years
ANNIVERSARY
Since 1942

மயிலாப்பூர்
கணபதிஸ் ®
ஸ்தாபிதம் 1942

வெண்ணெய் & நெய்

பாரம்பரியமாக 1942 முதல்

ஊத்துக்குளி வெண்ணெய் • ஊத்துக்குளி நெய்
மர செக்கு எண்ணெய் • அப்பளம் வகைகள் • பொடிகள்
உடனடி மிக்ஸ் • ஊறுகாய் வகைகள் • தொக்கு வகைகள்
இனிப்பு வகைகள் • கார வகைகள் • வடாம் • வத்தல்
உலர் பழங்கள் • ஸ்பைசஸ் • பேக்கரி வகைகள்
ஊர் ஸ்பெஷல்ஸ் • சீர் பட்சணம்

மயிலாப்பூர் கிளை :
# 14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
[பி. கே. மஹால் கல்யாண மண்டபம் அருகில்]
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292, 89390 27272

மேற்கு மாம்பலம் கிளை :
# 50, ஆர்ய கவுடா ரோடு,
[ ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்]
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363, 89390 36363

கருத்துக்களை தெரிவிக்க : 044 – 4856 6781 | வாட்ஸ் அப் : 73581 56781
மின்னஞ்சல் : info@mylaporeganapathys.com
ஆன்லைன் ஆர்டர்கள் www.mylaporeganapathys.com